## நடக்கவும், சைக்கிளில் செல்லவும் உத்தரவு

# சென்னையில் 6 இடங்களில் சாலைகளில் மாற்றம்!

## அமைச்சர் எஸ்.பி.வேலுமணி தகவல்!!

சென்னை, பிப்.11–

நகரப்புறங்களில்நடக்கவும், சைக்கிளில் செல்லவும் வசதியாக முதற்கட்டமாக சென்னையில் 6 இடங்களில் சாலைகளில் உள்கட்டமைப்பு வசதி செய்யப்படும் என்று அமைச்சர் எஸ்.பி.வேலுமணி கூறினார்.

பெருநகர சென்னை மாநகராட்சி பகுதிகளில் "மாபெரும்சாலைகள்திட்டங்கள்" செயல்படுத்துவதற்கானதொடக்கநிகழ்ச்சியினைநகராட்சிநிர்வாகம், ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்பு திட்டங்கள் செயலாக்கத்துறை அமைச்சர் எஸ்.பி.வேலுமணி குத்துவிளக்கேற்றிதுவக்கிவைத்தார்.

பெருநகர சென்னை மாநகராட்சி பகுதிகளில் "மாபெரும்சாலைகள்திட்டங்கள்" செயல்படுத்துவதற்கானதொடக்கநிகழ்ச்சியினை அமைச்சர் எஸ்.பி.வேலுமணி இன்று சென்னை லீலா பேலஸ் கூட்டரங்கில் குத்துவிளக்கேற்றி துவக்கி வைத்தார். அரசு தலைமைச் செயலாளர் கே.சண்முகம், இந்நிகழ்ச்சிக்கு தலைமை தாங்கினார். பெருநகரசென்னை மாநகராட்சி ஆணையர் கோ.பிரகாஷ், அனைவரையும் வரவேற்றார்.

முன்னதாக, அமைச்சர் "மாபெரும்சாலைகள்திட்டங்கள்" குறித்து வைக்கப்பட்டுள்ள கண்காட்சியினை பார்வையிட்டு, சென்னை சாலைகள் வடிவமைப்பு மற்றும் செயலாக்கம் குறித்த வழிகாட்டுதல்கள் அடங்கிய புத்தகத்தை வெளியிட்டார்.

நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்பு திட்டங்கள் செயலாக்கத்துறை அமைச்சர் எஸ்.பி.வேலுமணி தெரிவித்ததாவது :

### வாழ்வாதாரம்

தமிழ்நாட்டின் 50 சதவிகித மக்கள் நகர்ப்புறங்களில் வாழ்கின்றனர். எனவே நகர்ப்புற மேம்பாட்டு மற்றும் உள்கட்டமைப்பு வசதிகள் உலகத்தரத்திற்கு இணையாக அமைக்க வேண்டி உள்ளது. மேலும் சராசரியாக 30 சதவிகித மக்கள் தினமும் நடந்து செல்வது மற்றும்மிதிவண்டிகளில்செல்வது மற்றும் பொது வாகனங்களில் செல்வது என்ற நடைமுறை அனைத்து நகர்ப்புறங்களிலும் உள்ளது.



எஸ்.பி.வேலுமணி

ஆகவே, பொதுமக்கள் பாதுகாப்பாகநடப்பதற்கு, மிதி வண்டிகளை ஓட்டுவதற்கு தேவையானஉள்கட்டமைப்பு செய்ய வேண்டியுள்ளது. இந்த பணிகள் யாவும் சீர்மிகு நகர்ப்புற திட்டங்கள் மூலம் 10 மாநகராட்சிகளில் சீர்மிகு செயல்கள் என்ற திட்டத்தில் நடைமுறைப் படுத்தப்பட உள்ளது.

### பரிசோதனை

சென்னை மாநகராட்சி 387 கி.மீ நீளமுள்ள 471 பேருந்து சாலைகளையும் 5,525 கி.மீ நீளமுள்ள 33.374 உட்புற சாலைகளையும் பராமரித்து வருகிறது. இந்த சாலைகளை அமைக்கும்பொழுது அந்த சாலைகள்யாவும்நவீனஎந்திரங்கள் மூலம் அகழ்ந்து எடுக்கப்பட்டு சென்சார் எந்திரம் மூலம் சாலைகள் அமைக்கப்பட்டு வருகிறது. மேலும்மூன்றாம்நபர் தரக்கட்டுப்பாட்டு நிறுவனங்கள் மூலம் தர பரிசோதனைக்குட்படுத்தப்படுகிறது. சென்னைமாநகராட்சியாவிலேயே முதல் நகரமாக வாகனமில்லா போக்குவரத்துக் கொள்கையை நடைமுறைபடுத்தியது. இதன்மூலம்பொது மக்கள்மற்றும்பாதசாரிகள் பாதுகாப்பாகவும், நல்லமுறையிலும் சாலைகளில் நடப்பதற்கு வழிவகை செய்யப்பட்டுள்ளது.

சுமார் 150கி.மீ நீளத்திற்குஇதுமாதிரியான நடைபாதைகள், பேருந்து சாலைகள் அமைக்கப்பட்டு சுற்றுபுற சுழல் பாதுகாக்கப்பட்டு வழிவகை செய்யப்பட்டுள்ளது.

இத்திட்டம் செயல்படுத்தப்படும் இடங்களில் பேருந்து சாலைகள் முழுமையான சாலைகளாக மாற்றியமைக்கப்படும். இத்திட்டத்தில்426சதுரகிலோமீட்டர் பரப்பளவில், 400 கி.மீ. நீளமுள்ளபேருந்து சாலைகள்மற்றும்உள்ள286கி.மீ. நீளமுள்ள பிரதான சாலைகளும் படிப்படியாக மேம்படுத்தப்படும்.

இதன்முதற்கட்டமாக70சதுரகிலோமீட்டர் அடங்கிய 110 கி.மீ. நீளமுள்ளபேருந்துசாலைகள் மற்றும்உட்புறச்சாலைகள் அண்ணாநகர், தண்டையார்பேட்டை, நுங்கம்பாக்கம், மயிலாப்பூர், வேளச்சேரி மற்றும் அடையாறுபோன்றஇடங்களில் செயல்படுத்தப்படும்.

கீழ்க்கண்ட பிரதான சாலைகள் இத்திட்டத்தில் அமைக்கப்பட உள்ளது.

டாக்டர். ராதகிருஷ்ணன் சாலை, கதீட்ரல் ரோடு, காந்தி மண்டபம் சாலை, சர்தார் பட்டேல் ரோடு, எல்.பி.சாலை, திருவொற்றியூர்நெடுஞ்சாலை வடக்கு டெர்மினஸ் சாலை, நியூ ஆவடி சாலை 2வது மற்றும் 3வது அவென்யூசாலைஅண்ணாநகர், ராயப்பேட்டை நெடுஞ்சாலை, கச்சேரி ரோடு கிரீன்வேஸ் சாலை, சி.பி.ராமாசாமி சாலை, எல்டாம்ஸ் சாலை, ரேஸ் கோர்ஸ்ரோடு, வேளச்சேரி பிரதான சாலை, ஐந்து பர்லாங் சாலை.

இதுமட்டுமல்லாமல், இத்திட்டம் தமிழக அளவில் கோயம்புத்தூர், மதுரை, திருச்சி, சேலம், திருப்பூர், ஈரோடு, திருநெல்வேலி, தூத்துக்குடி, தஞ்சாவூர் மற்றும் வேலூர் ஆகியநகரங்களுக்கும்விரிவுபடுத்தப்படும்.

இதனால், இந்த நகரங்களில்பாதசாரிகளுக்கும், மிதிவண்டியில் பயணம் செய்பவர்களுக்கும் மற்றும் பொது வாகனங்களை பயன்படுத்துவோருக்கும் மிகுந்த பயனுள்ளதாக இருக்கும். இத்திட்டத்தால் விபத்துக்கள் குறைக்கப்பட்டு மக்கள்சிரமமின்றிநடக்கவழி செய்யப்படும்.

இந்நிகழ்ச்சியில், தமிழ்நாடு மின்சாரவாரியதலைவர் மேலாண்மை இயக்குநர், கூடுதல் தலைமைச் செயலாளர் விக்ரம் கபூர், சென்னைப் பெருநகர காவல் ஆணையாளர் ஏ.கே.விஸ்வநாதன், தமிழ்நாடு போக்குவரத்து துறை முதன்மைச்செயலாளர்தர்மேந்திர பிரதாப் யாதவ், சென்னைமெட்ரோரெயில் நிறுவன மேலாண்மை இயக்குநர் பங்கஜ் குமார் பேன்சல், சென்னைப் பெருநகர்குடிநீர்வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியமேலாண்மைஇயக்குநர்த.ந.ஹரிஹரன், சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரிய செயல் இயக்குநர்டாக்டர்த.பிரபுசங்கர், நகராட்சி நிர்வாக ஆணையர் கா.பாஸ்கரன், துணை ஆணையாளர் (பணிகள்) பி.குமாரவேல் பாண்டியன், துணைஆணையாளர்கள், மாநகராட்சி ஆணையாளர்கள், கே.எப்.டபுள்யூ, ஆசியபன்னாட்டு வங்கிபிரதிநிதிகள்உட்பட பலர்கலந்து கொண்டனர்.